# MODUL SOALAN TOPIKAL CEMERLANG AMANJAYA SPM 2018

BAHASA TAMIL

**தமிழ் மொழி எஸ்.பி.எம்.**

6354

**SET 3**

**விடிவெள்ளி 3**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

## பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை

[ *பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்* ]

நீர் உமது பள்ளியின் தமிழ்மொழிக் கழகச் செயலாளராக இருக்கிறீர். அக்கழகச் செயலாளர் என்ற முறையில் 2017-ஆம் ஆண்டுக்கான தமிழ்மொழிக் கழகத்தின் **ஆண்டறிக்கை** ஒன்றனைத் தயார் செய்க.

கீழே கொடுக்கப்பட்டுள்ள **குறிப்புகளை விவரித்து** உமது **ஆண்டறிக்கையைத்** தயார் செய்க.

- 2017 – ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலை உறுப்பினர் பட்டியல்
- பொங்கல் விழா
- கல்விச் சுற்றுலா
- இலக்கிய விழா
- தமிழர் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி

**ஆண்டறிக்கையைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- ஆண்டறிக்கை வடிவில் இருக்க வேண்டும்.
- பள்ளிப் பெயர், தலைப்பு எழுதியிருத்தல் வேண்டும்.
- தொடக்கம்/ அறிமுகம் இருத்தல் வேண்டும்
- நிகழ்வுகளைத் துணைத் தலைப்பில் எண்ணிட்டு எழுதியிருக்க வேண்டும்.
- அறிக்கை முடிவு இருத்தல் வேண்டும்
- அறிக்கை தயாரித்தவர் எனும் குறிப்பு முடிவில் இருத்தல் வேண்டும்.
- தேதி- வலப்புறத்தில் எழுதியிருக்க வேண்டும்.
- கையொப்பம், முழுப்பெயர், இருத்தல் வேண்டும்.

[30 புள்ளி]

**விடிவெள்ளி 3**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்]

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

**1 மின்னியல் வணிகத்தால் ஏற்படும் விளைவுகள்**
இத்தலைப்பில் **விவாதக்** கட்டுரை எழுதுக.

[ 70 புள்ளி ]

**விடிவெள்ளி 3**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)**

[ 30 **புள்ளி ]**

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

***கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.***

"என்னங்க!..." என்ற மங்களத்தின் குரல் கேட்டுக் கடுப்பான மாதவன்,

"என்னா? சீக்கிரம் சொல்லித் தொலை. சாப்பிட்டுக் கிளம்பனும். வேலை நிறைய இருக்கு."

மங்களம் பொறுத்துக் கொண்டு, "வந்துங்க நம்ம சங்கர் இங்க படிச்சி முடிச்சிட்டான். அவனுடைய கூட்டாளிங்க பினாங்கு, ஜோகூர்ல இருக்கிற கல்லூரிக்குப் போய்ப் படிக்கிறாங்களாம். சங்கர் நமக்குக் கிட்டயே இருக்கிற கோலாலம்பூருக்குப் படிக்கப் போறானாம். மூனு வருசம் படித்துவிட்டால் போதுமாம். வேலையையும் அவங்களே வாங்கித் தருவாங்களாம். தங்கி படிக்கவும் சாப்பாட்டுக்கும் மாசம் முந்நூறு வெள்ளி கொடுத்தால் போதுமாம். சிக்கனமாக இருந்து நல்லபடியா படித்து வருவதாகச் சொல்றான். என்ன சொல்றீங்க?"என்றாள்.

நல்ல வசதியான வீடு, பிள்ளைகளுக்குப் பிடித்தமான உணவு, நல்ல துணிமணிகள் என அவள் மனத்திலும் ஆசைகள் இருக்காதா? இதுநாள் வரை கணவனின் சம்பாத்தியத்தில் வெகு சிக்கனமாகவே குடும்பச் செலவுகளைப் பார்த்துக்கொண்டாள் மங்களம். கஞ்சி குடித்தாலும் கடனின்றி காலம் ஓடியது. வாடகை வீடு பழைய சைக்கிள் தவிர வேறேதும் இல்லை. இருப்பினும் மங்களம் கெட்டிக்காரி. சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்த பணத்தில் கொஞ்சம் நகைகள் வாங்கி வைத்திருந்தாள்.

"சரி சரி மாசம் முந்நூறு வெள்ளி தானே? அவன எப்பபடியாவது கரையேத்தப் பாரு. மூத்தவன் படிச்சி வந்திட்டால், அப்புறம் **அவனுக்குக் கீழ் உள்ளதுகளும் முழிச்சிக்கும்**. அவனாலாவது நமக்கு நல்ல காலம் பொறக்கட்டும்". உட்காரக் கூட நேரமில்லாமல் வேலைக்குக் கிளம்பிப் போகிறான் மாதவன்.

பதினாலு வயதுவரை பெற்றோருக்கு உதவியாய் இரப்பர் மரக்காட்டில் உலாவி வந்தவன் பதினைந்தாவது வயதில் ஒரு சீன லோரி டிரைவரிடம் உதவியாளனாய்ச் சேர்ந்தான். பின்னாளில் அச்சீனன் தொடங்கிய கம்பெனியில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டான். குறைந்த சம்பளத்தைக் கொடுத்துச் சிரித்துச் சிரித்துப் பேசி வேலை வாங்கும் முதலாளியின் தந்திரம் அவனை இருபத்தைந்து வருடங்களாக அடிமையாக்கி விட்டது. ஞாயிறு மட்டும்தான் விடுமுறை. அன்று ஏதாவது உபரி வேலை செய்து, கிடைக்கும் பணத்தில் தனது விருப்பம் போல் செலவு செய்வான். அவன் வேறு எதற்காகவும் கவலை பட்டதில்லை.

சங்கர் தலைநகரில் உள்ள ஒரு கல்லூரியில் படிப்பை மேற்கொண்டு ஒரு வருடமாகிவிட்டது. விடுமுறைக்கு வீட்டிற்கு வருவான். அம்மாவின் சமையலைப் பாராட்டுவான். தம்பி தங்கைகளோடு விளையாடுவான். அதே சங்கர் படிப்படியாக மாற ஆரம்பித்தான். அந்தக் கட்டணம் இந்தக் கட்டணம் என்று அடிக்கடி நூறு இருநூறு என அதிக பணம் கேட்கத் தொடங்கினான்.

முதல் 'செமஸ்டரில்' எல்லாப் பாடங்களிலும் தேரிவிட்டதாகக் கூறினான். பெற்றோருக்குப் பெருமகிழ்ச்சி. மாதவன் மகனுக்குக் கைத்தொலைப்பேசியை வாங்கித் தந்தான். இரண்டாம் மூன்றாம் 'செமஸ்டரில்' தலா ஒரு பாடத்தில் தோல்வி கண்டதால் கூடுதல் கட்டணம் கட்ட வேண்டிய நிலை. இரண்டு நகைகள் அடகுக் கடைக்குப் போயின.

சங்கரின் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. விடுமுறைக்கு வந்தால் வீடு தங்குவதில்லை. கூட்டாளிகளோடு இரவெல்லாம் சுற்றினான். பெற்றோரை மதிப்பதில்லை. மங்களம் மன நிம்மதியை இழந்தாள். மனக்கலக்கத்தைப் போக்கக் கோவிலுக்குச் சென்ற மங்களத்திற்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

சங்கருடன் படிக்கும் சூரியாவின் தாய் "மங்களம் நம்ப பிள்ளைங்க நம்பல நல்லா ஏமாத்திட்டாங்க...."

" என்னக்கா சொல்றே? " இடைமறித்தாள் மங்களம்.

"ஆமா மங்களம் இதுகளெல்லாம் படிக்கிறேன்னு போயி, பொம்பள பிள்ளைங்களோடு சேர்ந்து சுத்தி, தண்ணி, சிகரெட் குடிச்சி ஆட்டமா ஆடியிருக்காணுங்க. எங்க வீட்டுக்காரரு பத்திரிகைப் படிப்பதனால் விவரம் தெரிஞ்சவராக இருக்காரு. இவன் அடிக்கடி பணம் கேட்டதனாலே சந்தேகத்துலே காலேஜுக்கு போன் பண்ணி கேட்டதும்தான் தெரிஞ்சிச்சி இவனுங்க லட்சணம்."

"ஆ! என்ன சொன்னாங்க..........?

"என் மகன் இரண்டு பாடத்திலயும், உன்னோட மகன் எல்லாப் பாடத்திலேயும் கோட்ட விட்டுட்டானுங்களாம் இதைக் கேட்ட மங்களத்தின் மனம் துக்கத்தில் விம்மியது.

"எங்க வீட்டுகாரரு, அவன் படிச்சது போதும்னு சொல்லி, உடனே சூரியாவைக் கேமரன் மலையிலே, அவரோட தம்பி நிலத்துல வேலைக்கு அனுப்பிட்டாரு"

கனத்த மனத்துடன் வீட்டுக்கு வந்த மங்களத்தைக் கண்டதும் "நேத்து வச்ச கறி எனக்கு வேண்டாம் காசு கொடுங்க..." என்றான் சங்கர்.

"கொடுத்ததெல்லாம் போதும். நீ படிச்ச வண்டவாளமெல்லாம் தெரிஞ்சிப் போச்சி, நாளையிலேருந்து உங்க அப்பனோட சீன கம்பெனிக்கு வேலைக்குப் போ. நகைகளைத் திருப்பனும். மத்த பிள்ளைகளைப் படிக்க வைக்கனும்" குமுறினாள் மங்களம்.

**இரா.நல்லம்மா-**
மரக்கட்டை ஜென்மங்கள்
[எடுத்தாளப்பட்டது]

11. மங்களம் தன் மகன் கல்லூரிக்குப் படிக்கச் செல்ல வேண்டும் என்று விரும்பியதன் காரணங்கள் யாவை? [4 புள்ளி]

12. அ) இச்சிறுகதையில் வரும் மங்களத்தின் பண்புநலன்கள் **இரண்டை** எழுதுக. [2 புள்ளி]

ஆ) இச்சிறுகதையில் வரும் மாதவன் குடும்பத்திற்காக உழைப்பவனாக இருப்பினும் அவனிடம் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை விளக்குக. [4 புள்ளி]

13. மூத்தவன் படிச்சி வந்திட்டால், அப்புறம் **அவனுக்குக் கீழ் உள்ளதுகளும் முழிச்சிக்கும்**
கொடுக்கப்பட்ட கூற்றில் தடிப்பாக்கப்பட்டுள்ள தொடர் சூழலுக்கு ஏற்ப உணர்த்தும் பொருள் யாது? [2 புள்ளி]

14. அ) சூரியாவின் தாய் "மங்களம் நம்ப பிள்ளைங்க நம்பல நல்லா ஏமாத்திட்டாங்க...." என்று சொல்லக் காரணம் என்ன? [4 புள்ளி]

ஆ) கல்லூரிப் படிப்பைப் பாதியில் விடுவதால் சங்கரை ஒத்த இளைஞர்களுக்கு ஏற்படும் இழப்புகள் யாவை? [4 புள்ளி]

**விடிவெள்ளி 3 - பரிந்துரைக்கப்பட்ட - விடைப்பட்டி**

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 11 | - மகனுக்கு கிடைக்கவிருக்கும் வேலை வாய்ப்பு<br>- மூவாயிரம் வெள்ளி சம்பளம்<br>- மகன் வேலையில் சேர்ந்தபின் குடும்பத்தில் ஏற்படும் முன்னேற்றம்<br>(ஏதேனும் 2 விடைகள்) | 4 |
| 12. | அ.<br>- குடும்ப வளர்ச்சியில் அக்கறையுள்ளவள்<br>- சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவள்<br>- குடும்பத்தினரிடம் அன்புகொண்டவள்<br>(ஏதேனும் 2 விடைகள்)<br>ஆ.<br>- குடும்ப செலவிற்கும் பிள்ளை மேல்படிப்புக்கும் பணத்தைச் சம்பாதித்துக் கொடுத்தால் தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதுபவன்<br>- சூரியாவின் தந்தையைப் போல் உலக நடப்பு அறியாதவன்<br>- வேலையிடத்தில் தான் ஏமாற்றப்படுவதை உணராதவன்<br>- ஆராய்ந்து செயல்படாதவன்<br>(ஏதேனும் 2 விடைகள்) | 2<br><br><br><br><br><br>4 |
| 13. | -சங்கருக்கு இளையவர்கள் நன்கு படித்து முன்னேறுவார்கள் | 2 |
| 14.<br>(அ ) | - சங்கரும் சூரியாவும் கல்லூரியில் சேர்ந்த பின் படிப்பில் கவனம் செலுத்தாமல் மது அருந்துதல், புகைத்தல் மற்றும் பெண் மாணவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுதல் போன்ற பயனற்ற காரியங்களில் ஈடுபடுதல்.<br>- பெற்றோரிடம் அடிக்கடி பணம் கேட்பது<br>- கல்லூரித் தேர்வுகளில் தோல்வி<br>(ஏதேனும் 2 விடைகள்) | 4 |
| 14.<br>(ஆ ) | - வேலை தேடுவதில் சிரமம்<br>- குறைவான ஊதியம்<br>- வாழ்க்கைச் செலவினங்களைச் சமாளிப்பதில் சிக்கல்<br>- பெற்றோர் மற்றும் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற இயலாது<br>(ஏதேனும் 2 விடைகள்) | 4 |